بسم الله الرحمن الرحيم

# *Friday Sermon*/வெள்ளிக்கிழமை குத்து.ஃ.பா 03/03/2017

**(03 Jamad'ul Aakhir 1438 Hijira)**

## *"Love & Connection with Allah"*

## "அல்லாஹ்வின்மீதான அன்பும் பந்தமும்"



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும் தஅவசும் சூரா.ஃ.அல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு உரையாற்றினார்.

ஒரு நம்பிக்கையாளர் நிச்சயமாகவும் அல்லாஹ்விடம் அன்புடையவனாக இருக்க வேண்டும். அவனிடம் ஒரு பந்தமும் இருக்க வேண்டும். ஒருவரிடம் உங்களுக்கு அன்பிருந்தால் அன்னாருக்காக எதுவும் செய்ய நீங்கள் தயாராகி விடுவீர்கள். அன்பிருந்தால் அன்னாருக்காக எவ்வளவு கடினமான விஷயத்தையும் செய்வது உங்களுக்கு சுலபமாகயிருக்கும். அதன் பலனாக சிந்திக்க கூட

இயலாத விஷயங்களும் நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள். ஒரு நபர் ஒரு விஷயத்தை விரும்பிக்கொண்டால் அதை அடைவதற்கான முயற்சிகளை மேற்க் கொள்கின்றார். இவ்விஷயத்தை அவர் உண்மையாக விரும்புகின்றார் என்றால் அவர் நேரத்தை குறித்தோ பணத்தைக் குறித்தோ சிந்திக்க மாட்டார். அவர் அனைத்தையும் மறந்தவாறு அதை அடைவதற்கான முயற்சியில் ஈடுபடுவார். அவருக்கு சுற்றும் தடங்கல்கள் இருப்பதாக அவர் கண்டு கொள்ளவும் மாட்டார். (அவர் விரும்புவதை அடைய வேண்டும் என்பதன்றி வேறெதுவும் அவருக்கு தடங்கல் விளைவிப்பதில்லை) அவரது முன் ஒரேயொரு விஷயம் மட்டுமே எஞ்சும். அவர் விரும்புகின்ற, அவர் மோகம் கொள்ளுகின்ற நபரின் அல்லது பொருளின் எண்ணம் மட்டும்.

18- வயதான ஒரு இளைஞனின் விஷயத்தை எடுத்துக் கொள்வோம். அவர் விரும்புகின்ற நபரை கூடாமல் வாழ்ந்துக் கொள்ள முடியாத ஒரு நிலை அவருக்கு அனுபவப்படுகின்றது. அவர் விரும்பிக்கொண்ட நபருக்காக தன் குடும்பத்தை கூட தவிர்த்துக் கொள்ள அவர் ஆயத்தமாகின்றார். அதற்கு அவருக்கு எவ்வித கவலையும் இருக்காது. அவர் அவரது குடும்பத்தையும் அவனது அன்னையையும் அவனது தந்தையையும் அவனது சகோதரர்களையும் அவனது "தீனைக் கூட ***(Religion - Islam)*** அவன் விரும்புகின்ற பொருளுக்காக அல்லது நபருக்காக கைவிட்டுக் கொள்ள தயாராகின்றான். நிறைந்த திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் இச்செயல்களுக்கு அவர் ஆயத்தமாகின்றார்.

நமக்கு (முஸ்லீம்களுக்கு) அல்லாஹ்விடம் இவ்வகையிலான ஒரு திடமான அன்பு இருந்திருந்தால் நம் தீனை ***(Religion - Islam)*** நமக்கு செயல்வடிவில் கொண்டு வருவதற்கு எவ்வித கவலையும் இருக்காது. நம் பாதுகாவலனாகிய இறைவனிடம் நாம் வைத்திருக்கும் அன்பின் காரணமாக எல்லா வகைப்பட்ட துன்புறுத்தல்களுக்கும் ஆளாகிக் கொள்ள எந்த கவலையுமிருக்காது என்று மட்டுமின்றி அதற்கு நாம் மகிழ்ச்சியுடன் ஆயத்தமாகிக் கொள்ளவும் செய்வோம். அப்பொழுது தீனை பின்பற்றிக் கொள்வது மிக எளிதாகயிருப்பதோடு அது நமக்கு மகிழ்ச்சியையும் அளிக்கும். அவ்வகையிலான நற்குணமுடையவர்களின் முன் மாதிரியான வாழ்க்கை முறைகள் நம் முன் இருக்கின்றது. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பாதை வழியாக பயணம் புரிவதற்கு அவர்களின் முன் இருந்த தடங்கல்களை நீக்கிக் கொள்ள எந்த கவலைகளும் அவர்களுக்கு இருந்ததில்லை. ஹஸ்ரத் இப்ராஹீம்(அலை) அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வை அடைவதற்கும் அவன் அன்பினை பெற்றுக் கொள்வதற்குமாக தனது சுகவசதிகளை கைவிட்டுக் கொண்டார்.

**ஒரு நாள் மண்ணாகி போகின்ற ஒருவருக்காக, இழிவான ஒருவருக்காக, பிணமாகி போகின்ற ஒருவருக்காக எந்த தியாகங்களை செய்வதற்கும் அதாவது தன் பதவியையும் தன் இடத்தையும் தன் கண்ணியத்தையும் தியாகம் செய்வதற்கு ஒருவர் ஆயத்தமாகின்றாரென்றால் ஏன் அல்லாஹ்வுக்காக**

**அனைத்தையும் கைவிட்டுக் கொள்ள மனித குலத்திற்கு முடியாமலிருப்பது? அவனோ என்றென்றும் வாழ்ந்திருப்பவன். அனைத்தையும் நிலைநிற்கச் செய்பவன். அவனது நிலைநிற்புக்கு ஒரு துவக்கமோ ஒரு முடிவோ இல்லவேயில்லை. எல்லா நேரங்களிலும் நமக்காகவே அவனிருக்கின்றான் "நமக்கு தேவையானதனைத்தும் அவன் வழங்கிக் கொள்கின்றான். அக்காரணத்தாலே புத்திசாலிகளான ஆட்கள் அவர்களில் அனைத்து ஆற்றல்களும் எல்லா பொருட்களும் அவர்களுடைய அனைத்தும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மகிழ்ச்சிக்காக அவன் வழியில் செலவு செய்துகொண்டிருப்பது.**

எல்லாம் வல்ல இறைவனின் மகிழ்ச்சி, அவனின் தீனின் பாலே குடிகொள்கின்றது அதாவது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டவாறு நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்தல், நம் அன்புக்குரிய தூதர் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களின் முன் மாதிரியான வாழ்க்கை முறையை பின் பற்றி கொள்தல் போன்றவையாகும். வாழ்க்கையில் பெரும்பாலான விஷயங்களை அடைந்து கொள்தல் என்பது சற்றுக் கடினமான காரியமாக வந்து விடலாம். ஆனால் அது சுலபமும் மகிழ்ச்சி அளிப்பதுமாக மாறிவிடும். நீங்கள் ஒருவரை உள்ள பூர்வமாக நேசித்து கொள்கின்றீர்கள் என்றால் அவனுக்காக அல்லது அவளுக்காக இரவில் தூங்காமலிருந்துக் கொள்ள வேண்டுமென்றால் அது கடினமான விஷயம் என நீங்கள் எண்ணுவீர்களா?

இளைய தலைமுறைகள் ***(Young People)*** இன்று அவர்களின் இரவுகளை சந்தோஷபோதையால் உல்லாசித்தாடுகின்றனர். ஏனெனில் அவர்கள் விரும்பிக்கொள்வோர்களின் திருப்திக்காகவும் அவர்களின் வாழ்த்துகாகவும் தான். **எல்லாம் வல்ல அல்லாஹ்வை நேசித்துக் கொள்பவரை பொறுத்தவரையில் தன்னை படைத்தவனின் திருப்திக்காக நள்ளிரவில் எழும்பிக் கொள்தல் என்பது கடினமானதேயல்ல. தனது பாதுகாவலனாகிய இறைவனை குனிந்து கும்பிடும் பொழுது அவர் அனுபவித்துக் கொள்ளும் உள்ள உணர்ச்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல. அது வாயிலாக அவர் பெற்றுக்கொள்வது விலைமதிக்க இயலாத அனுபவங்களாகும் அந்நேரம் அவர் உண்மையில் அடைந்துக் கொள்வது என்ன? இதை பகுத்தறிவதற்கு முற்றிலும் சுலபமான ஒரு வழி நீங்கள் இதை குறித்து சுயம் ஓர் ஆய்வில் ஈடுபட்டுக் கொள்ள ஆயத்தமாக வேண்டும். அப்பொழுது அவனை உண்மையில் அனுபவித்து கொண்டதன் ஒரு கருத்து உங்களுக்கு கிடைத்து விடும். அதாவது இறைவனிடமிருந்து உங்களுக்கு கிடைக்கும் அந்த பிரதிபலன்(அனுபவம்) என்ன என்பது விவரித்துக் கொள்வதற்குகூட இயலாத ஒரு அனுபவமாகயிருக்கும்.**

ஆகவே நீங்கள் இந்த பிரார்த்தனையை செய்துக் கொள்ளுங்கள் "என் இறைவா உன் அன்பை எனக்கு வழங்கி கொள்வாயாக! உன்னை நேசித்துக்

கொள்ள எவர் ஒருவரின் அன்பு எனக்கு பயனளிக்கின்றதோ அவரின் அன்பை எனக்கு அளிப்பாயாக! என் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக! இந்த நட்பை அடைய வேண்டுமென்றால், உங்களுக்கு எல்லாம் வல்ல இறைவனிடம் ஆற்றல் வாய்ந்த ஒரு பந்தம் இருக்க வேண்டும். இப்பந்தம் என்னவென்பதை குறித்து நீங்கள் உணர்ந்து கொள்ள நான் இது கூட கூறிக்கொள்கின்றேன். உங்களின் அன்பாளனாகிய இறைவன் மீதான பந்தம் உண்மையில் அசாதாரணமான மகிழ்ச்சியை வழங்கிக் கொள்ளும் ஒரு ஊற்றாகும். ஒவ்வொருவரும் அவ்வகையிலான ஒரு பந்தத்தை உருவாக்க ஆசைப்படுகின்றீர்கள். இந்த இலட்சியத்தை அடைவதற்கு எந்த தயக்கமுமின்றி அதற்காக என்ன செலவுசெய்வதற்கும் தயாராகயிருக்கின்றீர்கள்.

பத்திரிக்கைகளிலிருந்து சிலவேளைகளில் இவ்வாறு செய்தியை நீங்கள் படித்து கொள்கின்றீர்கள். அதாவது உங்களின் ஹீரோக்களை நேரடியாக காண்பதற்கான ஒரு நல்ல வாய்ப்பு அளிக்கின்றோம். அதாவது(அக் ஹீரோக்களின்) அருகாமையில் இருப்பதற்கான வாய்ப்பு அளிக்கின்றோம். இந்த வாக்குறுதிப்படி அந்த வாய்ப்பு நமக்கு கிடைக்க வேண்டுமென்றால் அதற்கு பணம் செலவு செய்ய வேண்டியதாகயிருக்கும். அதாவது 10000-லிருந்து 25000 வரையிலும் செலவு செய்ய வேண்டும். இது சாதாரணமாக உயர்ந்ததும் ஒரே நிலையை கொண்டதுமான தொகையாகும். இந்த உயர்ந்த அளவிலான பணம் மக்களை அங்கு செல்வதிலிருந்து தடுத்துக் கொள்வதில்லை. இவ்வகையிலான ஹிரோக்களை சந்திக்க விரும்புகின்றோர்களைப் பொறுத்தவரையில் இந்த உயர்ந்த தொகையை செலுத்தி அனுமதி சீட்டு பெற்று கொள்ள தயாராகயிருக்கின்றனர். அனுமதி சீட்டு தீர்ந்து கொண்டால் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அனுமதி சீட்டின் விலையை மேலும் அதிகரித்து கொண்டு பிரவேசனம் அனுமதிப்பார்கள். அந்த கட்டத்தில் கூட மக்கள் பணத்தை குறித்து சிந்திப்பதில்லை. மாறாக (எப்படியாவது அந்த ஹீரோவை கண்டுகொள்ள வேண்டும்) அதை மிக பெரிய சந்தர்பமாக அவர்கள் எண்ணுகின்றனர். பின்னர் அவர்களின் “ஆசை ஹீரோவை” தனியாகவோ ஒன்றிணைந்தோ கண்டுக் கொள்வதற்கான வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்த மக்களுக்கு அந்த ஹீரோவிடம் விருப்பம் ஏற்படுவதற்கான காரணம் அந்த ஹீரோவிற்கு அல்லாஹ் அளித்திருக்கும் சில ஆற்றல்கள் இருக்கின்றது என்பதனாலாகும். நாம் எவர் ஒருவருக்கு கூட நமக்கு தேவையென்றால் நம் பிரகடனங்கள் வழியும் நம் திறமைகள் வழியும் நம் தன்மைகள் வழியும் அதைபோன்றே ஆகிவிடலாம். ஆனால் ஒரு விஷயத்தை நாம் மறந்து விட கூடாது, அதாவது இந்த ஆற்றல்கள் அனைத்தும் நம்மிடம் இருந்தாலும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் முன் நாம் உண்மையில் துக்கமுடைய ஒரு யாசகராகவேயிருக்க வேண்டும். அனைத்துலகையும் கட்டிக்காக்கும் அல்லாஹ்வின் பேருதவிகள் வாயிலாகவும் அவன் கருணைகள் வாயிலாகவும் மட்டுமே நாம் வாழ்க்கை நிலைநிற்பது(அதுவே உண்மை).

**இந்த யாசகருக்கு(அந்த ஹீரோ) ஆயிரகணக்கிற்கான மக்களின் இதயங்களை ஈர்த்துக் கொள்வதற்கும் கீழ்படிய செய்வதற்குமான ஆற்றல் இருக்கின்றது என்றால் அதை முன்வைத்து சிந்திப்பதற்கான ஒரு வாய்ப்பு நமக்கு கிடைக்கின்றது. அதாவது எல்லாம் வல்ல இறைவனிடமிருந்து மிக குறைவான ஒரு சிறிய அளவிற்கு கிடைத்தபோதே இவ்வளவு ஈர்ப்பு தன்மை உருவாகி கொண்டதென்றால் அல்லாஹ்வின் மகத்துவம் எவ்வளவு உயர்ந்தும் வல்லமையுடையதாகவும் இருக்கும். அப்போது அவன் மீதான நம் ஈர்ப்பு எந்த அளவிற்கு உயர்ந்ததாக இருக்க வேண்டும்.**

நம்மை அற்ப்புதப்படுத்துகின்ற அழகினுடையவும் ஆற்றல்களுடையவும் மற்றனைத்து விஷயங்களுடையவும் ஊற்று என்பது உன்னதனான அல்லாஹ்விடமிருந்தாகும். ஒரு பொருளின் அழகை நாம் பகுத்தறிவது நம் பௌதீகமான கண்கள் வழியாகும். அந்த கண்கள் நம் தலையுமாக இணைந்திருக்கின்றது. இவ்வகையிலான பகுத்தறிவை "பஸ்வாராஹ்" ***(basvaarah)*** என கூறப்படுகின்றது. இந்த ஆற்றல் நாம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அதன் பலனாகவே அந்த அழகு மிக்க பொருளை நாம் அங்கீகரித்துக் கொள்வதும் மதித்து கொள்வதும். ஒரு அழகை நாம் தரிசித்துக் கொள்ளும் நேரம், நாம் அற்புதம் வாய்ந்தவரைப் போன்று அதன்பால் ஈர்க்கப்படுகின்றோம். அந்த ஆற்றல் ஒவ்வொரு நபரிலும் இருக்கின்றது. ஆனால் பெரும்பாலான ஆள்களும் ஒரு காரியத்தில், ஒரு திறமையில், ஒன்றும் தெரியாதவர்களாக இருக்கின்றனர்(குறைபாடு). அதற்கு "பசவிறஹ்" ***(basweerah)*** என்று கூறப்படுகின்றது. அதாவது இதயத்தின் கண்கள் ***(The Eyes of the Heart)***. இதயத்தின் கண்களால் தரிசித்துக் கொள்வதற்கான ஆற்றல் இல்லை என்பதாகும்.

**தீனின் அழகு, அதன் விலை, பயன் இவற்றை அனுபவித்து கொள்வதற்கும் செயல் வடிவில் கொண்டு வருவதற்கும் இதய கண்களின் தேவையுண்டு. அதற்கு நாம், "பஸ்விறஹ்" என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றோம். இந்த "பஸ்விறஹ்" என்றால் அது உன்னதனான அல்லாஹ்வின் மகத்துவத்தை தரிசிப்பதற்காக அனுமதி வழங்கிக் கொள்கின்றது, அவன் மகத்துவத்தைக் குறித்து அனுபவங்களும் அது நமக்கு பகிர்கின்றது.**

மனிதர்களுக்கு இந்த கண்கள் வழங்கப்பட்டிருகின்றது என்றாலும் அது பார்வையற்றதாக இருக்கின்றது. அந்த இதயத்தின் கண்கள் செயல்படாதக் காரணத்தின் வாயிலாகவே நாம் அனைத்து வகையான பௌதீக பொருள்களின் பின்னால் பயணம் மேற்கொள்வது. அதன் காரணம் எல்லாம் வல்ல இறைவனிடத்தில் தொடர்பு வைக்க முடியாமல் வருகின்றது. ஆகவே நம் உள்ளத்தின் "பஸ்வீறஹ்" வை நாம் வளரச் செய்ய வேண்டும். இது மிக அத்தியாவசியமான விஷயமாகும். அதற்கான ஒரு வழி என்பது, எல்லாம் வல்ல

அல்லாஹ்வுடன் எந்நேரமும் பந்தம் வைத்திருக்கும் ஒருவரிடம் சேர்ந்திருப்பதாகும்.

## What does a person who receives a connection with Allah the Almighty really feel?

**எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பந்தம் வைத்திருக்கும் ஒருவர் உண்மையில் என்ன அனுபவித்துக் கொள்கின்றார்?**

நல்ல வகையான ஒரு ஞானம், ஒரு திருப்தி அனுபவித்து விட ஆரம்பிக்கின்றார், அவர் நேசிக்கும் ஒருவரின் அன்பு வட்டாரத்திற்குள் நுழையும் பொழுது! அந்த நேசம் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும். அவ்வகையலான ஒருவருக்கு அதிலிருந்து ஒரு கருத்து கிடைக்கின்றது. அதாவது "அதைபோன்றே எல்லாவல்ல அல்லாஹ்விடம் திடமான பந்தம் வைத்துக் கொள்வதன் வாயிலாக அனைத்தும் அவருக்கு அனுபவித்து விட முடியும்மென்று" இந்த பந்தம் அல்லாஹ்வுமாக தொடர்புபடுத்தி பேச இயலாது. மற்று ஏதேனும் பொருள்களுடனும் இணைத்து பேசவும் ஆகாது. ஏனெனில் இது நன்கு உணர வேண்டுமென்றால் அல்லாஹ்வுடன் அவ்வகையான ஒரு பந்தத்தில் வாழ்ந்திடவேண்டும் என்பது தான். அனைத்து அழகும் எல்லா ஆற்றலும் ஒரு விஷயத்தின் பால் சேர்த்து வைத்துக் கொண்டாலும் (கற்பனையில்) அது அல்லாஹ்வின் விஷயத்திலாகயிருந்தாலும் சரி அதொன்றும் அல்லாஹ்வின் முன் எதுவுமேயல்ல (அதற்கும் அப்பர்பட்டவனாக அவனிருகின்றான்) எல்லாம் வல்ல அல்லாஹ்விடமான பந்தம் என்பது நிச்சயமாக இந்த தற்காலிகமான உலகில் இருக்கும் அனைத்து ஈர்ப்பு பொருள்களையும் விட மேலானதும் ஆற்றல் வாய்ந்ததுமாகும்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த உரையினை உணர்ந்து கொள்வதற்கான "தௌபீக்" அல்லாஹ் வழங்கி கொள்வதற்காக நான் பிரார்தனை செய்கின்றேன். நாம் ஒன்றிணைந்து கடின முயற்சிகள் மேற்க்கொள்ள வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ்வுடன் பந்தம் வைத்திருக்கின்றோர்களிடம் சேர்ந்திருக்க! அது வாயிலாக நமக்கு நம் பாதுகாவலனாகிய அல்லாஹ்வுமாக பந்தம் வைத்துக் கொள்வதற்கான அந்த அன்பு கைவந்து விடும்.

இன்ஷா அல்லாஹ் ஆமீன்

**Issued by:**

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**

AZIM AHMAD
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817